அறிவிக்கை

## குடிமைப் பணிகளுக்கான (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்..ஐ.ஆர்.எஸ்) 2020 ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வுக்கானப் பயிற்சி

அகில இந்திய குடிமைப் பணிகளை மேற்கொள்ள விழைவோருக்கான முதல்நிலைத் தேர்வுகளை, மத்திய தேர்வாணைக் குழு 31.05.2020 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் கட்டணமில்லா தங்கும் வசதி, சத்தான உணவு மற்றும் வசதிமிக்க நூலகம், காற்றோட்டமுள்ள வகுப்பறைகள் ஆகிய வசதிகளை கொண்டு இயங்கி வருகிறது.

இப்பயிற்சி மையம் 225 முழு நேர தேர்வர்களையும் 100 பகுதி நேர தேர்வர்களையும் பயிற்சிக்காக தேர்வு செய்கிறது. மேற்குறித்த 325 தேர்வர்களை தேர்தெடுப்பதற்கான நுழைவுத் தேர்வு தமிழகம் முழுவதும் உள்ள 20 தேர்வு மையங்களில் 13.10.2019 அன்று நடைபெற உள்ளது.

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் சேர்ந்து, பயிற்சி பெற விரும்பும் தமிழ்நாட்டைச் சார்ந்த பட்டதாரிகள்/முதுநிலைபட்டதாரி மாணவர்களிடமிருந்து இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சி சுமார் ஆறு மாத காலத்திற்கு அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம், சென்னை–28–ல் நடைபெறும், **இப்பயிற்சி மையத்தில் ஏற்கனவே முதல் நிலைத் தேர்வுக்கு முழு நேர பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.**

**1)குறைந்தபட்சகல்வித் தகுதி :**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/கல்லூரியில் இருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம்.

ஆ) வயதுவரம்பு : (1.8.2020 அன்று)

| | |
|---|---|
| குறைந்தபட்ச வயது-அனைத்து வகுப்பினருக்கும் | – 21 வயது |
| அதிகபட்ச வயது - இதரவகுப்பினர் | – 32 வயதுமிகாமல் |
| 1) ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் | – 37 வயதுமிகாமல் |
| 2) பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்–முஸ்லிம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | – 35 வயதுமிகாமல் |
| 3) மாற்று திறனாளிகள் | –42 வயதுமிகாமல் |

இருக்க வேண்டும்.

2) முக்கியமான நாட்கள்

| | | |
|---|---|---|
| அ. | இணையதளவழிவிண்ணப்பிக்கதொடங்கும் நாள் | (10.00முப) 30.08.2019 |
| ஆ. | இணையதளவழிவிண்ணப்பங்கள்சமர்ப்பிப்பதற்கானக டைசிநாள் | 16.09.2019 (மாலை 6.00மணி வரை) |
| இ. | தேர்வுநடைபெறும் நாள்மற்றும் நேரம் (கொள்குறி வகை) | 13.10.2019) (ஞாயிற்றுக்கிழமை) (முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 12.30 மணி வரை) |

3)முழுநேர மற்றும் பகுதிநேரப் பயிற்சி:

தங்கும் வசதியுடனான முழுநேரப் பயிற்சியும் மற்றும் தங்கும் வசதியின்றி பகுதிநேரப் பயிற்சியும் கீழ்கண்ட வகையில் அளிக்கப்படும்.:

| பயிற்சிமுறை | இனம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதிதிராவிடர் | அருந்ததியர் | பழங்குடியினர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பிற்படுத்தப்பட்டோர் | பிற்படுத்தப்பட்டோர் – முஸ்லீம் | மாற்றுதிறனாளிகள் | இதரவகுப்பினர் | மொத்தம் |
| (முழு நேரம் ) விடுதியில் தங்கி பயிற்சி பெறுதல் | 92 | 18 | 3 | 40 | 54 | 7 | 7 | 4 | 225 |
| (பகுதிநேரம்) மாலை நேர பயிற்சி பெறுதல் | 41 | 8 | 1 | 18 | 24 | 3 | 3 | 2 | 100 |

4) கட்டணம் :முழுநேரம் மற்றும் பகுதிநேரம்

| வகுப்பு (இன வாரியாக) | காப்புத் தொகை (திரும்ப வழங்கக் கூடியது) ரூ. | தனிக் கட்டணம் (முழுநேரம் மட்டும்) ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| **ST/SCA/SC/MBC/DNC/BC/ BC(M)/ DA/OC** | **3000** | - | **3000** |
| **OC Candidates only** | **3000** | **1000** | **4000** |

அ) முழு நேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கட்கு பயிற்சிநேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

-3-

ஆ) பகுதிநேரப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கட்கு பயிற்சிநேரம் வாராந்திர நாட்களில் மாலை **6.30** மணிமுதல் **8.30** மணி வரையிலும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை **10.30** மணி முதல் மாலை **5.30** மணி வரை வழங்கப்படும்

5) விடுதி :

அ) முழு நேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு கட்டணமின்றி பயிற்சி, தங்கும் வசதி மற்றும் உணவு அளிக்கப்படும். விடுதியில் தங்குவோர் விடுதிக் காப்பாளர்/கல்லூரி முதல்வர் அனுமதியின்றி வெளியில் செல்லக் கூடாது. கற்கும் சூழலுக்கு இசைவான வகையில் நடந்து கொள்ளவேண்டும். பொது ஒழுக்க முறைமைக்கு புறம்பான செயலில் ஈடுபட்டால் பயிற்சியில் இருந்து வெளியேற்றப்படுவர்.

ஆ) பகுதி நேரப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு விடுதிவசதி வழங்கப்பட மாட்டாது. ஆயினும் வாரத்தின் ஐந்து நாட்களுக்கு இரவு உணவும், சனி, ஞாயிறு இரு நாட்களில் இரு வேளை உணவும் பகுதி நேர பயிற்சியாளர்கட்கு வழங்கப்படும்

6) நுழைவு தேர்வுமையங்கள் :

சென்னை, கடலூர்,கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, நாகர்கோயில், வேலூர், மற்றும் விழுப்புரம் (இதில் ஏதேனும் **ஒரு மையத்தை** தேர்ந்தெடுக்கவும்)

7) நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை :

அகில இந்திய குடிமைப் பணித்தேர்வு பயிற்சி மைய **இணையதளம் :www.civilservicecoaching.com** என்ற இணையதளத்தில் Online வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

8) நுழைவு சீட்டு

நுழைவு சீட்டு இப்பயிற்சி மைய இணையதளத்தில் 07.10,2019 அன்று பதிவேற்றம் செய்யப்படும்.

இணையதளமுகவரி:www.civilservicecoaching.comஎன்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்து, நுழைவுச் சீட்டைதேர்வு மையத்திற்கு அவசியம் எடுத்து வரவேண்டும். ஏற்கத்தக்க அசல் அடையாள அட்டையையும் கொண்டு வரவேண்டும்.

நுழைவு சீட்டு எக்காரணத்தினாலும் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

9) <u>நுழைவுத் தேர்வு:</u>

தகுதியுடைய நபர்கள் **13.10.2019** (ஞாயிற்றுக்கிழமை)அன்று 10.30 முதல் 12.30 வரை நடைபெறும் நுழைவுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். [இந்திய வரலாறு மற்றும் இந்திய தேசிய இயக்கம், இந்தியா மற்றும் உலக புவியியல், இந்திய அரசியலமைப்பு மற்றும் நிர்வாக முறை, பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சி, பொது அறிவியல், நடப்பு நிகழ்வுகள், சுற்றுப்புற சூழ்நிலை தொடர்பான பொது விவாதங்கள், உயிரின பரிணாம வளர்ச்சி , பருவநிலை மாற்றங்கள், ஆங்கிலம் மற்றும் பொதுதிறனறித் தேர்வு ஆகியவற்றில் கேட்கப்படும் 100 கொள்குறி **(Objective Type)**வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் .தேர்வு எழுதவருவோருக்கு பயணப்படி/தினப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

10) <u>தெரிவு செய்யும் முறை:</u>

எழுத்து தேர்வில் தகுதி பெற்ற மாணவ/ மாணவியர் இனவாரியாக அதிகபட்ச மதிப்பெண் பெற்றவரில் துவங்கி அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு ஏற்ப சேர்க்கப்படுவர்.

11) காலி இடங்கள் ஏதுமிருப்பின் காத்திருப்போர் பட்டியல்படி பயிற்சியாளர் சேர்க்கை நடைபெறும்.

12)தேர்வர்கள் சேர்க்கை முற்றிலும் தற்காலிகமானது. உண்மைக்குப் புறம்பானதகவல்கள், அல்லது தகவல்கள் மறைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டால் அனுமதி ரத்து செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல்வர்/பயிற்சிஇயக்குநர்,
அகிலஇந்தியகுடிமைப்பணித் தேர்வுப்
பயிற்சிமையம்,சென்னை 28